# இலங்கைக் கலைஞர்
# ஜோர்ஜ் கீற்

- ஆசியாவில் புகழ்பெற்ற நவீன ஓவியரான ஜோர்ஜ் கீற் 1901 ஆம் ஆண்டு கண்டியில் சிங்கள பறங்கியக் குடும்பத்தில் பிறந்தார்.
- கண்டி திரித்துவக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பயின்றார்.
- **43குழு என்னும் ஓவியக் குழுவில் அங்கத்துவம்** வகித்தார்.
- இவர் **கோதமி விகாரையில் சுவர் ஓவியங்களை** வரைந்து புகழ்பெற்றார்.
- இவருடைய ஓவியங்கள் இந்து மதக் கலைச் செல்வாக்கைக் கொண்டதாக காணப்படுகிறது.
- **பப்லோ பிக்காசோ ஓவியங்களுக்கு ஒத்த தன்மை** இவரது ஓவியங்களில் காணப்படுகிறது. இருந்த போதும் அவருக்கே உரியபாணியில் ஓவியங்களை வரைந்துள்ளார்.
- கொழும்பு பொரளை கோதமி விகாரையில் பௌத்த மத ஓவியங்களை வரைந்து பாராட்டைப் பெற்றார். இவருக்கு ஓவியங்கள் வரைவதற்காகச் **சுவரை நிர்மாணித்துக் கொடுத்தவர் அன்ட்று புரொயிட்** எனும் வெளிநாட்டுக் கலைஞர் ஆவார். வரைதலில் மஞ்சுசிரி ஓவியர் உதவியாக இருந்தார்.
- விகாரையின் தியான மண்டப உட்சுவரிலும் வெளிச்சுவரிலும் (பிரதக்ஷினா பாதய) மூன்று பக்கச் சுவர்களில் பாரிய அளவில் மூன்று சித்திரங்கள் வரைந்துள்ளார்.

# கோதமி விகாரை ஓவியம்

## மார யுத்தம்

- இவ்வோவியத்தில் **பிக்காசோவின் கனவடிவவாதத் தன்மைப் பண்புகளைக்** காட்டியிருக்கிறார்.
- விசித்திரமான **கேத்திர கணித வடிவங்களைப் பயன்படுத்தி யுத்தப் படையினரின் பயங்கரமான சுபாவத்தைத்** திறமையாக வெளிப்படுத்தியுள்ளார்.
- **படைகளைச் சாம்பல், கறுப்பு** போன்ற இருளான வர்ணங்களையும், **புத்தபெருமானைச் சித்தரிக்க மஞ்சள்** மெல்லிய மண்ணிறம் போன்ற வர்ணங்களையும் பிரயோகித்துள்ளார்.
- இரேகைகளின் தன்மையைப் போலவே **முப்பரிமாணத்தைக் காட்ட வர்ணத்தை பிரயோகித்த விதமும்** அவருக்கே உரியபாணியில் அமைந்துள்ளன.





# ஜோர்ஜ்கீற்றின்

# நாயிகா ஓவியங்கள்

- நாயிகா ஓவியங்கள் என்பது பெண்ணுருக்கள் ஆகும்.
- எண்ணெய் வர்ண ஊடகத்தால் கன்வஸ் துணியில் வரையப்பட்டுள்ளது.
- நாயிகா சித்திரங்கள் **நீண்ட விழிகளையும், அகன்ற உதடுகளையும்** கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளன.
- **நெற்றியையும் மூக்கையும் காண்பிக்க தனி நேர் கோட்டைப்** பயன்படுத்தியிருக்கிறார்.
- இவ்வோவியங்கள் **இந்து சமய மரபுக்கு ஒத்த** இயல்பைப் பெற்றிருப்பதாக விமர்சிக்கப்படுகிறது.



